

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அருப்புக்கோட்டை நகர் பகுதிகளில் வாக்களித்து வெற்றி பெற வைத்த வாக்காளர் பெருமக்களுக்கு நேரில் சென்று நன்றி தெரிவித்தார். அருப்புக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன். உடன் செயற்குழு உறுப்பினர்கள் கே.கே.எஸ்.எஸ்.வி.டி.சுப்பாராஜ், சிவப்பிரகாசம், நகரச் செயலாளர் ஏ.கே.மணி உள்ளனர்.

### தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருக்கு வாழ்த்துக்கள்!

# முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்தநாள் விழா! மாவட்டம் முழுவதும் நல உதவிகள் வழங்கப்படும்!

## நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

நாமக்கல், மே 23 -

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாமக்கல் முல்லை நகரில் உள்ள மாவட்ட அலுவலகமான கலைஞர் அறிவாலயம் பேராசிரியர் கூட்ட ரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அவை தலைவர் சி.மணி மாறன் தலைமை தாங்கினார்.

முன்னாள் அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ராமலிங்கம், இராமசுவாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் தி.மு.க. செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், முன்னாள் முதல்வர் கலைஞரின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு வரும் ஜூன் 3ஆம் தேதி நாமக்கல் கிழக்கு மாவட்டம் முழுவதும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், பள்ளி மற்றும் அங்கன்வாடி குழந்தைகளுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல், ஏழை எளிய மக்களுக்கும் முதியோர்களுக்கும் உணவு வழங்குதல் உள்ளிட்ட நலத்திட்ட பணிகளை ஒன்றிய, நகர மற்றும் பேரூர் பகுதிகளில் மேற்கொள்ளவது,

மேலும், ஜூன் 3ஆம் தேதி காலை 8.30 மணிக்கு பரமத்தி சாலையில் உள்ள டாக்டர் கலைஞரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்கி பிறந்தநாள் விழாவை சிறப்பாகக் கொண்டாடுவது. அதே போல், தமிழ்நாடு சட்டப் பேரவைக்கான 17வது தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு வாக்களித்த நாமக்கல், ராசிபுரம் மற்றும் சேந்தமங்கலம் தொகுதி மக்களுக்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நன்றி தெரிவிக்கப் பட்டது.

தேர்தலில் சிறப்பாக பணியாற்றிய கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கும் பாராட்டு தெரிவித்துக் கொள்வது. மேலும், தி.மு.க. இளைஞரணி செயலாளரும், முன்னாள் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை தமிழ்நாடு சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவராக கழகத் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை தேர்வு செய்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதுடன் எதிர்க்கட்சித் தலைவருக்கு வாழ்த்து தெரிவிப்பதுடன், எதிர்க்கட்சித் தலைவரின் பணிகளுக்கு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகம் என்றும் உறுதுணையாக இருக்கும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

### உழைப்பாளிகளின் தலைவர்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை எழுச்சியோடு கொண்டாடுவீர்!

## தொ.மு.ச. பேரவைப் பொதுச் செயலாளர் மு.சண்முகம் அறிக்கை!



சென்னை, மே 23 -

தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு. சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவரும் தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதாரத் துறையில் முன்னணி மாநிலமாக மாற்றியவரும் மாணவர் நலன், பெண்கள் முன்னேற்றம், அரசு ஊழியர், ஆசிரியர்கள், தொழிலாளர் நலன்களில் தீவிர கவனம் செலுத்தியவரும், அமைப்புசாரா தொழிலாளர்களின் நலனில் மிகுந்த அக்கறையெடுத்து அமைப்புசாரா நல வாரியங்களை உருவாக்கியவரும், போக்குவரத்துக் கழகம், நுகர்பொருள் வாணிபக் கழகம், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு தேயிலை வாரியம், தமிழ்நாடு சிமெண்ட் வாரியம், தமிழ்நாடு சர்க்கரை வாரியம், குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் போன்ற பொதுத்துறைகளை உருவாக்கியவர்.

அரசு ஊழியர்களுக்கு குடும்பப் பாதுகாப்பு திட்டம் கொண்டு வந்தவர். ஓய்வூதிய பணிக் காலத்தை 30 ஆண்டுகளாக நிர்ண யித்தவர்.

ஒன்றிய அரசு ஊழியர்களுக்கு இணையாக தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கியவர். மே தினத்திற்கு ஊதியத்துடன் விடுமுறை தந்தவர்.

மேதின நினைவுச் சின்னம் நிறுவியவர் என்று பல்வேறு சாதனைகளுக்கு சொந்தக்காரார்.

நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு வரும் ஜூன் 3 அன்று தமிழ்நாட்டில் இயங்கி வரும் ஆலை வாயில்கள், அலுவலக வளாகங்கள், அமைப்புசாரா தொழிலாளர்கள் கூடும் இடங்களில் தொ.மு.ச. பேரவை கொடியினை ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்குவதோடு வாய்ப்புள்ள அமைப்புகளின் சார்பாக நலத்திட்ட உதவிகளை வழங்கி விழாவை சிறப்பாகக் கொண்டாட வேண்டுமாய் தொ.மு.ச. பேரவை சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தென்காசி தெற்கு மாவட்டம் கீழப்பாவூர் மத்திய ஒன்றியம் பகுதி துவரங்காடு, இடையர் தவணை, வெள்ளகால் ஆகிய பகுதிகளில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் கிராமம் கிராமமாகச் சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், முன்னாள் மாவட்டச் செயலாளர் பொ.சிவபத்மநாதன், ஒன்றிய செயலாளர் சேசு ராஜன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்டம் திருச்சுழி தொகுதியில் வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர் தங்கம் தென்னரசு பொது மக்களுக்கு நன்றி கூறி ஊர்வலமாக சென்றார்.



# தி.மு.க. இளைஞர் அணி

## மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், வருகிற 23.05.2026 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் துணைச் செயலாளர்கள் முன்னிலையில், **கழகத் தலைவர்** அவர்களின் சிறப்புரையுடன் நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில், மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பொருள்**

- ஜூன் 3, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள்
- கழக இளைஞர் அணி ஆக்கப் பணிகள்

**அன்பகம்**
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 18-05-2026

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு

# கடலூர் மேற்கு மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

கடலூர், மே 23 -

கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம், நெய்வேலி தொமுச அலுவலகத்தில், 20.05.2026, புதன் கிழமை, மாலை 6 மணியளவில், மாவட்டக் கழக அவைத் தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக துணை செயலாளர்கள் ஆர்.எஸ்.எம். தணிகைசெல்வம், ஆனந்தி சரவணன், பொருளாளர் கோ.தண்டபாணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வி.கே. வெங்கட்ராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டக் கழக செயலாளர், திட்டக்குடி சட்டமன்ற உறுப்பினர் சி.வெ. கணேசன் சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் கீழ்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை எதிர்க்கட்சி தலைவராக நியமித்த கழக தலைவர் தளபதி அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம்.

கடலூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற தொகுதிகளில் கழகம் மற்றும் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களுக்கு வாக்களித்த மக்களுக்கும், களப்பணியாற்றிய கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கூட்டணி கட்சி தோழர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு, 3ம் தேதி கடலூர் மேற்கு மாவட்டக் கழகம் சார்பில் மாவட்டம், ஒன்றியம்,நகர, பகுதி, பேரூர்க் கழகம் சார்பில் கழக கொடியேற்றியும், நலத்திட்ட உதவிகள் வழங்கியும்,கல்வி உபகரணங்கள் வழங்கியும், ஏழை எளியோருக்கு உணவு வழங்கி யும் சிறப்பாக கொண்டாட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து தொகுதிவாரியாக கள ஆய்வு செய்ய குழு அமைக்கப்பட்டுள்ளது. கடலூர் மாவட்டத்திற்கு கள ஆய்வுக் குழுவினர் வருகையின் போது தேவையான ஏற்பாடுகளையும் ஒத்துழைப்பை வழங்கிட வேண்டும்.

நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் நமது மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களித்த வாக்காளர்களுக்கு, ஒன்றிய நகர பேரூர் மற்றும் கிளை கழகம் மாறியாக நேரில் சென்று நன்றி தெரிவிக்கின்ற வகையில், போட்டியிட்ட வேட்பாளர்களின் ஆலோசனை பெற்று உறு ஏற்பாடுகளை செய்திட ஒன்றிய நகர பேரூர் கிளை கழகத்தின் நிர்வாகிகளை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது, என்பன உள்ளிட்ட தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட்டன.

கழக ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் செ.புஷ்பராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பா.பாவாடை கோவிந்தசாமி, பொதுக் குழு உறுப்பினர்கள் என். பலராமன், பொ.புகழேந்தி, ஆர்.பாலகிருஷ்ணன், ஆர். இராதாகிருஷ்ணன் க.ராஜேந்திரன், செந்தமிழ் செல்வி கருப்புசாமி, ஒன்றிய கழக செயலாளர்கள் வி.அமிர்தலிங்கம், பா.செங்குட்டுவன், த.சின்னசாமி, சிவ.தியாகராஜன், கனக. கோவிந்தசாமி, தி.வேல்முருகன், என்.ஆசைதம்பி, ப. சுரேஷ், அ.குண சேகரன், இரா.சந்தோஷ்குமார்,

நகர கழக செயலாளர்கள் க.இராஜேந்திரன்,வி. குருநாதன், ப.மணிவண்ணன் க.தண்டபாணி, ப.பரமகுரு, வி.குருநாதன், பேரூர் கழக செயலாளர்கள் ஆர்.சுந்தரவடிவேல், வ.ஜெயமூர்த்தி, ம.குமாரவேல், சி.செல்வம் (எ) பால சுப்பிரமணியன்,

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார் ஆதிதிராவிடர் அணி ராமு,மாணவரணி சதீஷ்குமார்,வழக்கறிஞர் அணி அருள்குமார், பாரி இப்ராஹிம், பகுத்தறிவு பேரவை வழக்கறிஞர் மதனகுரு, தகவல் தொழில்நுட்ப அணி ஆனந்த், மருத்துவர் அணி ஆர்.ராஜேஷ், வர்த்தகர் அணி ப.குணா, எம்.எஸ்.ராம்குமார், மகளிரணி ஜெயந்தி நடராஜன், சிறுபான்மையினர் அணி அன்சார் அலி,முகமது யூசப், என்.எல்.சி தொ.மு.ச தலைவர் ஞா.ஞானஒளி, பொருளாளர் அப்துல் மஜீத்,அலுவலக செயலாளர் சீனிவாசன்,

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ராஜேஷ்,துரைராஜ், தங்க. நாராயணசாமி,ஆ.சதாம் செந்தில்குமார்,மற்றும் தங்க.அன்பழகன், சாமிநாதன்,டி.குணா, க.சேகர், கோனூர் மதியழகன், வழக்கறிஞர் நாராயணன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.